# வவுனியாவில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பாக சிங்கள ஊர்காவல் படையினர் சிலர் பொலிஸாரால் கைது

அண்மையில் ஊரடங்குச்சட்ட நேரம் வவுனியாவில் இடம் பெற்ற கொலைகள் தொடர்பாக சிலர் வவுனியாவில் கைதாகியுள்ளதாகவும், இவர்கள் சிங்கள ஊர்காவல் படையைச் சேர்ந்தவர்கள் எனவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எட்டுபபேர் காணாமல் போன சம்பவம், யாழ்ப்பாண லொறி ஒன்றின் உரிமையாளர் மூன்று முறிப்பில் வைத்து ஊரடங்குச்சட்ட நேரம் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டமை என்பன தொடர்பாகவும் இந்த ஊர்காவல் படையினர் மீது விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதேபோல கற்குழிப்பகுதிக் கிணறு ஒன்றில் இருந்து சில சடலங்கள் மீட்கப்பட்டதற்கும் வீடு ஒன்று எரிக்கப்பட்டதற்கும் இவர்களே காரணம் என வவுனியா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்கள் ஒரு குழுவாகச் செயற்பட்டு இந்த வன்முறைகளில் ஈடுபட்டதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. கைது செய்யப்பட்ட இந்தக் கோஷ்டியில் சிலர் ஊர்காவல் படையினர் எனினும் சிலர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது இவர்களின் கைதையடுத்து வவுனியாவில் அண்மையில் இடம்பெற்ற சில கொள்ளைச் சம்பவங்களும்துப்புத்துலக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது


பக்கங்கள் நான்கு     விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 24 பிரமோதூத மார்கழி 06 (21-12-1990) வெள்ளி


## இடமாற்றம் கிடைக்காத ஆசிரியை அதிபர் மீது இப்படியும் பழி சுமத்தினார்!

தீவுப்பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் அதே பாடசாலையில் பணி புரியும் உதவி ஆசிரியை மீது பாலியல் வன்முறையில் ஈடுபட்டதாக அந்த ஆசிரியை கல்வி அதிகாரி ஒருவருக்கு முறைப்பாடு செய்துள்ளாராம். இந்த உதவி ஆசிரியை இப் பாடசாலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குப் பல தடவைகள் இடமாற்றம் கோரியிருந்ததாகவும் ஆனால் அக்கோரிக்கை கைகூடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்தே அவர் இவ்வாறு புகார் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. தான் மழையில் நனைந்தபடி பாடசாலைக்கு வந்ததாகவும் நனைந்த சேலையை அறையில் மாற்றிக்கொண்டிருந்தபோது அதிபர் வந்து தன் மீது பாலியல் வன்முறையில் ஈடுபட்டதாகவும், அதனால் தான் அப்பாடசாலைக்கு செல்ல முடியாது எனவும் அந்த ஆசிரியை கூறியுள்ளாராம். (19)

### பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்கீழ்

# கைதாகும் அப்பாவி இளைஞரிடம் பணம் பறிக்கும் மோசடி

### சட்டமா அதிபர் சுனில் டீ சில்வா சுட்டிக்காட்டுகிறார்

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுவோரை விடுவிப்பதில் பல மோசடிகள் இடம்பெறுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்படுவோரை விடுவிப்பது இன்று ஒரு வருவாய் உள்ள தொழிலாக நடைபெற்று வருவதாக சட்டமா அதிபர் சுனில் டீ சில்வா தெரிவித்துள்ளார்.**

இந்த மோசடியில் பெரும் தொகைப்பணம் சம்பந்தப்படுவதால்,சந்தேக நபர்களை விடுவிப்பது பற்றி குறிப்பிட்ட சில விதி முறைகள் பின்பற்றப்பட வேண்டும். என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைதானவர்களின் உறவினர்கள், தேவையான தகவலை பொலிஸாரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபருக்கு எதிராக வழக்குத் தொடருவதற்கு போதிய ஆதாரங்கள் உண்டா என்பதை சட்டமா அதிபர் திணைக்களம் பொலிஸாருக்கு அறிவுறுத்தும்.

ஆனால், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவரின் இறுதி முடிவை பாதுகாப்பு அமைச்சர் அல்லது அமைச்சின்செயலாளரே எடுப்பார்என்றுமேலதிக சொலிஸிஸ்டர் ஜெனரல் திலக் மாரப்பன தெரிவித்தார்.

பயங்கரவாதத்தடைச் சட்டத்தால் பல தமிழ் இளைஞர்கள் கைதாகி வருவதுடன் அவர்களை விடுவிக்க சில அதிகாரிகள்பெரும் தொகைப் பணத்தை லஞ்சமாகப் பெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## திருமலையில் படையினரால் ஐவர் ரயர்போட்டு எரிப்பு

## ரி. விக்குள் ரீ-84 துப்பாக்கி முஸ்லிம் நபருக்கு சென்றதாம்

கொழும்பிலிருந்து காத்தான்குடியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றை வெலிஓயா கடவத்த மடுவ என்னுமிடத்தில் பாதுகாப்புப்படையினர் சோதனை நடாத்தியபோது தொலைக் [illegible]

தலைமையகம் தெரிவித்தது.

துப்பாக்கியைத் தாங்கிச் சென்ற அந்த ரிவி காத்தான்குடி முஸ்லிம் ஒருவருக்கு முகவரியிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக குறித்த [illegible]

### மாங்குளம் விபரம் விடுதலைப் புலிகள் பத்திரிகையில்

மாங்குளம் இராணுவ முகாமை எவ்விதம் தாக்கி கைப்பற்றப்பட்டது எனும் விபரத்துடன் விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்'' பத்திரிகை கரும்புலி லெப்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

### மாங்குளத்தில்

## மின் இணைப்புக்களின் திருத்தவேலை விரைவில்

துண்டிக்கப்பட்டுள்ள 132 கே. வி மின் இணைப்புக்களின் திருத்த வேலைகளை மேற்கொள்ளவென மின்சார சபையின் குழுவொன்று அடுத்த வாரம் மாங்குளம் செல்லவுள்ளது.

இத்திருத்த வேலைகளுக்கான சில உபகரணங்களை கொழும்பிலிருந்தே பெற வேண்டியுள்ளதாக மின்சார

— 4 ஆம் பக்கம் பார்க்க

### சுயவிருப்பத்தில் ஒய்வு பெற

## இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் அவ்விடத்தில் விண்ணப்பிக்கலாம்

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் போர் நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தற்காலிகமாக வசிக்கும் ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள, ஊழியர்கள் தாம் தற்காலிகமாகக் கடமை புரியும் பகுதிக் கோட்டக் கல்விப்பணிமனையிலேயே ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பத்தினை

— 4 ஆம் பக்கம் பார்க்க

### பிரிட்டிஷ் அரசு அன்பளிப்பு

## யாழ் பல்கலைக் கழகத்துக்கு [illegible]

## ஐவர் ரயர்போட்டு எரிப்பு

திருமலை நகர்ப்பகுதியில் அமைந்துள்ள சமாதிப் பிள்ளையார் கோவிலடியில் வைத்து 5 பொதுமக்களை இராணுவம் வெட்டிக் கொன்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் பெண், ஆண் குழந்தைகளும் அடங்குவதாகவும் இவ்வாறு வெட்டப்பட்டவர்களைபடையினர் ரயர் போட்டு எரித்துள்ளனர். (71)

## மட்டக்களப்பில் 6 இடங்களில் காலவரையறையற்ற ஊரடங்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு இடங்களில் கால வரையறையற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது

வவுனதீவு, கொக்கட்டிச்சோலை, பெரியபோரதீவு, சின்னபோரதீவு, வெல்லாவெளி, மண்டூர்ப் பகுதிகளே ஊரடங்கு அமுலில் உள்ள பிரதேசங்களாகும்.

ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதற்கான காரணம் ஏதும் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்படவில்லை.

## டெலோ முக்கியஸ்தர் டேவிட் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பில் டெலோ அமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவரான டேவிட் என்பவர் அவரது வீட்டில்வைத்து இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவருடன் இவரது மனைவி மற்றும் குடும்ப நண்பர்கள் சிலரும் கொல்லப்பட்டுள்ளனர். இவரது மகன் துப்பாக்கிச் சூடுக்காயங்களுடன் உயிர் தப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடாத்தியபோது தொலைக் காட்சிப் பெட்டியொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ரி. 84 ரக ரைபிள் ஒன்றைக் கைப்பற்றியதாக பாதுகாப்பு

இதுதொடர்பாக குறித்த லொறி சாரதியும், கிளீனரும் படையினரால் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர். (11)

### யாழ் பல்கலைக் கழகத்துக்கு

## ஒதுக்கப்பட்ட நிதியை திறைசேரி வழங்க மறுப்பு

யாழ் பல்கலைக் கழகத்தில் கட்டிடங்கள் அமைப்பதற்கென கடந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் அதனை வழங்க அரச திறைசேரி மறுத்துள்ளது.

இதற்கென வரவு செலவுத் திட்டத்திலேயே இந்நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நாட்டின் குழப்ப நிலை காரணமாக தற்போது வழங்க முடியாது எனவும், நிலைமை சீரடைந்ததும், அது வழங்கப்படுவது குறித்து ஆராயப்படும் எனவும் யாழ் பல்கலைக் கழத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

## ஆனையிறவில் புலிகள் ஷெல் தாக்கு

ஆனையிறவு இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் ஷெல் தாக்குதலை நடாத்தினர்.

இத்தாக்குதலினால் முகாமிலிருந்த வீடு சேதமாக்கப்பட்டது. (71)

## ஆய்வு கூட உபகரணங்கள்

யாழ் பல்கலைக்கழகத்துக்கு ஆய்வு கூட உபகரணங்களை லண்டனில் இருந்து தருவித்து அன்பளிப்பாக வழங்கவுள்ளதாக பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலய பிரமுகர்ஜோன் ஸ்பெயின் தெரிவித்தார்.

இப்பொருட்கள் விரைவில் லண்டனில் இருந்து கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்து வரப்படுமெனவும் யாழ்

— 4 ஆம் பக்கம் பார்க்க

### யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்த

## மருத்துவ உபகரணங்கள் துறைமுகத்தில் தவம் கிடக்கின்றன

பிரிட்டிஷ் அரசு யாழ் போதனா வைத்தியசாலைக்கென வழங்கிய ஏழு கோடி ரூபா பெறுமதியான முக்கிய மருத்துவ உபகரணங்கள் கொழும்பு சுகாதார அமைச்சில் வீணே கிடந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

### பாராளுமன்றத்தில் அனுரா தகவல்:

## இலங்கைத் தூதுவர் சுவீடனில் மதுபோதையில் விழுந்தார்

சுவீடனில் உள்ள இலங்கைத் தூதுவர் அங்கு இடம் பெற்ற விருந்துபசாரம் ஒன்றின் போது அளவுக்கதிகமாக மதுவருந்தி போதை தலைக்கேறி மேசையில் சரிந்தார் என்று சுதந்திரக்கட்சி எம் பி அனுரா பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் கூறினார்

இந்த விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்தவரும் இலங்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12129

### தேவை

வெற்று வெள்ளை முழுப் போத்தல், சீமெந்து பாக், கோழித்தீன் பாக்தேவை. மில்க்வைற் - யாழ்ப்பாணம். 12128

## ஒப்படைகளை ஒப்படைக்கலாம்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டமேற்படிப்பு கல்வி டிப்ளோமா பயிற்சி நெறி 90/91 மேற்கொண்டுள்ள மாணவர்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் தமது ஒப்படைகளை சமர்ப்பித்தற்குரிய திகதி இவ்வருடம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலைகளால் இம்மாணவர்களுக்கு இச்சலுகை வழங்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் தமது ஒப்படைகளை பிராந்திய நிலையங்களில் அல்லது மத்திய நிலையத்தில் சமர்ப்பிக்கலாமெனவும் திறந்த பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. (30)

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1991

பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு இம்மன்றத்தோடு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள். உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல்மூலையில், வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1991, எனக் குறிப்பிட்டு 18.01.1991ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது அதற்கு பிந்தாது இதன் கீழ் கையொப்பம் இட்டுள்ளவருக்கு கிடைக்கக் கூடியதாக பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப் படாதபதிவுக் கட்டணத்துக்கான காசோலை அல்லது காசுக்கட்டளை ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்ற பெயருக்கு எழுதப்பட்டு விண்ணப்பத்துடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

| பொருட்களின் விபரம் | | மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணம் | |
|---|---|---|---|
| 01. | எழுது கருவிகள் | 100 | 00 |
| 02. | அச்சிட்ட பொருட்கள் | 100 | 00 |
| 03. | சௌக்கிய பொருட்கள் (மலகூட, நகரசுத்திகளஞ்சியப்பொருட்கள், இரும்பு வாளிகள், தும்புத்தடிகள், ஈக்குக்கட்டுகள், மலகூட நகரசுத்தி நாசினிவகைகள்) | 100 | 00 |
| 04. | பிரசவ விடுதிக்கு மேலைநாட்டு மருந்துகள் | 50 | 00 |
| 05. | மரப்பலகைகள் | 50 | 00 |
| 06. | தண்ணீர் மானிகள் | 100 | 00 |
| 07. | பி. வி. சி. குழாய்கள் பொருத்திகள் | 100 | 00 |
| 08. | ஜீ. ஐ குழாய்கள் பொருத்திகள் | 100 | 00 |

## குருத்துவ வெள்ளி விழா



புனித பத்திரிசியார் கல்லூரியின் உப - அதிபராகக் கடமையாற்றும் அருட்திரு யேசுநேசன் அடிகளார் இன்று தனது குருத்துவ சேவையின் வெள்ளிவிழாவினைக் கொண்டாடுகின்றார்.

1939. 12 19 அன்று திரு. திருமதி பிலிப்பையா தம்பதிகளுக்கு மகனாக புலோலியில் பிறந்த அருட்திரு யேசுநேசன் தனது ஆரம்ப கல்வியை புலோலி றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றவர்.

பாடசாலை நாட்களில் சிறந்த உதைபந்தாட்ட வீரராக திகழ்ந்தவர். குருவாகும் விருப்பத்தோடு அமலமரித்தியாகிகள் குருமடத்தில் சேர்ந்த அருட்திரு யேசுநேசன் 1965. 12 21 அன்று அதி. வணக்கத்திற்குரிய மார்க்கஸ் பெர்னான்டோ அவர்களால் கொழும்பு புனிதலூசியா பேராலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருவாகியதன் பின்னர் சில காலம் அமலமரித்தியாகிகளின் பிரசங்கியராக பணியாற்றிய அவர் பின்னர் கண்டி அம்பிட்டிய குருமடத்தில் விரிவுரையாளராக கடமையாற்றினார். 1973 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் உள்ள நாகர்கோவில் என்னும் இடத்தில் அனாதைக் குழந்தைகள் விடுதியில் கடமையாற்றி,வண. யேசுநேசன் 1975 -ல் அமெரிக்கா, கனடா ஆகிய இடங்களில் சமூகவியலில் மேற்படிப்பை மேற்கொண்டார்.

1980 -ம் ஆண்டில் யாழ் புனித பத்திரிசியார்கல்லூரியில் உப. அதிபராக கடமையேற்றார்.

இன்று காலை 8.30மணிக்கு யாழ் பேராலயத்தில் அடிகளாரின் வெள்ளிவிழா திருப்பலியும் அ...

# படைப்பாளி மீது பரிவுகாட்டிய விமர்சகர் கைலாசபதிக்குப் புகழாரம்

''கைலாசபதி ஒரு படைப்பாளியாகவே தமது இலக்கிய வாழ்வை ஆரம்பித்தார். ஆகையினாலேதான், தலை சிறந்த விமர்சகராக அவர் நிமிர்ந்தபோதும் படைப்பாளிகள் மீது பரிவுடையவராகஅவர் விளங்கினார்''

இவ்வாறு பேராசிரியர் க. கைலாசபதியின் எட்டாவது நினைவஞ்சலிக் கூட்டத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய கவிஞர் முருகையன் குறிப்பிட்டார் கம்பன் கோட்டத்தில்கடந்த ஞாயிறுகாலை நடந்த இக்கூட்டத்திற்கு பேராசிரியர் நந்தி தலைமை வகித்தார். 'மல்லிகை' ஜீவா வரவேற்புரை நிகழ்த்தினார்.

கவிஞர் முருகையன் தொடர்ந்து பேசுகையில் 'பரபு வழித் தமிழ்ப்புலமை, பகுத்தறிவுவாதம், பொதுவுடமைச்சிந்தனை என்ற மூன்று செல்வாக்குக்கும் கைலாசபதி தமது பள்ளிப் பருவத்தில் உள்ளாகினார்' என்றார்.

குலோத்துங்கனுடைய கவிதை கைலாசபதிக்கும் மஹாகவிக்கும் தமக்கும் பிடித்ததை விபரித்து, 'விமர்சகர்களிடையே சூழலால், பின்னணியால் பல வேறுபாடுகள் இருப்பினுங்கூட, கலாரீதியாக ஒன்றை மதிப்பிடுவதற்கு, பக்கச்சார்பற்ற ஓர் அளவுகோல் இருக்கவே செய்கிறது' எனக் குறிப்பிட்டார்.

பேராசிரியர் நந்தி தமது தலைமையுரையில், வைத்தியத்துறை அனுபவத்தை வைத்துப் புனைகதை எழுதுமாறு கைலாசபதி - ஒரு மாணவராக இருக்கும்போதே தம்மைத் தூண்டியதையும், சிறுகதை எழுதிக் கொண்டிருந்த டானியல், ஒரு நல்ல நாவலாசிரியராக வருவார் என்று தீர்க்க தரிசனத்துடன் கூறியதையும் குறிப்பிடடார்.

'இந்த மண்ணையும் மக்களையும் நேசித்த மாபெரும் மனிதாபிமானி' என்று மல்லிகை ஜீவா கைலாசபதிக்குப் புகழாரம் சூட்டினார்.

கைலாசபதியின் மாணவரான விரிவுரையாளர் சிவலிங்கராசா தனதுரையில் மாணவர்களுடைய சிந்தனைகளையும் அங்கீகரித்துப் பாராட்டும் பண்புடையவராக கைலாசபதி விளங்கினார் என்றார்.

யாழ் பல்கலைக்கழகம், இலங்கை.

மருத்துவபீடம்

### பரீட்சைகளின் திகதிகள்

மருத்துவபீட மூன்றாம் ஆண்டுப் பரீட்சை (பகுதி II) 17. 01. 1991 இலும் மருத்துவ பீட இரண்டாம் ஆண்டு மீள் பரீட்சை 21 01. 1991 இலும் நடைபெறும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட மாணவர்களுக்கு மூன்றாம் ஆண்டு (பகுதி II) மருத்துவ பரீட்சையும், இரண்டாம் ஆண்டு மீள் பரீட்சையும் கொழும்பில் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவினால் நடத்தப்படும். ஏனைய மருத்துவ மாணவர்கள் இந்தப் பரீட்சைகளுக்குக் கொழும்பில் தோற்ற முடியாது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே தோற்ற வேண்டும்.

பதிவாளர்

13321

### மருதனாமடத்தில் அதிபர் கூட்டம்

மருதனாமடக் கோட்டத்தில் உள்ள சகல அதிபர்களுக்குமான கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 1990 ஆம் ஆண்டு கல்வி, நிர்வாகம் சம்பந்தமான விடயங்களும், 1991ஆம் ஆண்டுக்கான உத்தேச திட்டமும் ஆராயப்படவுள்ளதால் சகல அதிபர்களும் தவறாது சமுகமளிக்கவேண்டுமென பிரதம கல்வி அதிகாரி ஆர். கே. குலசேகரம் பணித்துள்ளார். 32

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## கரைச்சிப் பிரதேச சபை கிளிநொச்சி

# கேள்வி அறிவித்தல்- 1990

கண்டாவளை பொதுச் சந்தையிலிருந்து ஆரம்பித்து. கொம்படி ஊடாக இயக்கச்சி செல்லும் வீதி வேலைக்கு கேள்விகள் ரூபா 500000/-(ஐந்து இலட்சத்திற்கு)பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன, ரெண்டர் கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் ரூபா 500/- பத்திரப் பணமாகவும், ரூபா 5000/- ரெண்டர் பிணைப் பணமாகவும் செலுத்தி, வரும் 26-12-90 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரைக்கும் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் பூரணப்படுத்தப்பட்டு 28-12-90 ஆம் திகதி 2.00 மணிவரையும் சீல் வைத்த ரெண்டர் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப் படும்.

விசேட ஆணையாளர்,
பிரதேச சபை,
கரைச்சி, கிளிநொச்சி.

12-12-90

12130

குருத்துவ வெள்ளிவிழா வாழ்த்து:

| | | |
|---|---|---|
| 05. | மரப்பலகைகள் | 50 00 |
| 06. | தண்ணீர் மானிகள் | 100 00 |
| 07. | பி. வி. சி. குழாய்கள் பொருத்திகள் | 100 00 |
| 08. | ஜீ. ஐ குழாய்கள் பொருத்திகள் | 100 00 |
| 09. | சகல அளவுகளிலுமான இரும்புக் கம்பிகள் எம். எஸ். | 100 00 |
| 10. | இரும்புச் சாமான்கள் | 100 00 |
| 11. | பெயின்ற் இனாமல் | 50 00 |
| 12. | வாகனத்தகடுகள் | 100 00 |
| 13. | லொறிக்கான உதிரிப்பாகங்கள் | 100 00 |
| 14. | சேவை இணைப்புக்கள் விநியோகக் கம்பிகள், தெருவிளக்கு ஏற்றல் முதலியனவற்றுக்கான மின்சாரப் பொருட்கள். | 500 00 |
| 15. | ஆயுர்வேத மருந்து வகைகள். | 100 00 |

பதிவு செய்யப்பட்ட வழங்குநகள் நிரலில் இருந்து வழக்கமாகக் கூறுவிலைகள் கோரப்படும். எனினும் அவசியமாகக் காணப்படுமிடத்து வேறு வழங்குநர்களிடம் இருந்து விலைகள் கோரிக் கொள்வனவு செய்யவும் உரிமை மன்றத்திற்கு உண்டு. வேண்டப்படும்போது உரிய காலத்தில் வழங்கத் தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விபரங்களுக்கு அல்லது மாதிரிக்கு அமையாதனவாக இருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகள் அறிவித்தல் இல்லாது பதிவேட்டில் இருந்து நீக்கம் செய்யப்படும்.

**வி. பி. பாலசிங்கம்**

மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

மாநகர சபை, யாழ்ப்பாணம்.
19. 12. 90

12126

புனித பத்திரிசியார் கல்லூரியில் உப. அதிபராக கடமையேற்றார்.

இன்று காலை 8.30மணிக்கு யாழ் பேராலயத்தில் அடிகளாரின் வெள்ளிவிழா திருப்பலியும் அதனைத் தொடர்ந்து புனித சம்பத்திரிசியார் கல்லூரி மதுரம் சதுக்கத்தில் வரவேற்பு விழாவும் இடம்பெறும்.

---

# வாக்குத்தத்த வைரவிழா

மிருசுவில் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் தற்பொழுது கடமையாற்றும் அருட்சகோதரி றோஸ் டி லீமா இம்மாதம் 18-ம் திகதி தனது துறவற வாழ்வின் 60-ம் வருட பூர்த்தி வைர விழாவை எளிமையான வகையிலே நினைவு கூர்ந்தார்.

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருடசகோதரி றோஸ் டி லீமா யாழ், மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களின் பல பகுதிகளிலும் மற்றும் குருநாகல், அனுராதபுரம், பதுளை மாவடடங்களிலும் அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

1930-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் திகதி வாக்குத்தத்தத்தைப் பெற்ற இவருக்குத் தெய்வ ஆசிகோரி மிருசுவில், சில்லாலைப் பங்குகளில் திருப்பலிகள் நிறைவேற்றப் படவுள்ளன.

---

குருத்துவ வெள்ளிவிழா வாழ்த்து:

# மகிழ்நனை வாழ்த்துவோமே!

இறைபணிக்காய் வாழ்வையீந்து இருபத்தைந் தாண்டுகாலம்
மறைபரப்பும் சேவையிலே மகிழ்வுகண்ட மாதவத்தோன்
அருணையே ஒப்பானெம் அருள்நிறையும் யேசுநேசன்
கருணையதே வடிவமானான் காசினியோர் மகிழ்வூப்ப

காண்பல கருமமாற்றிக் கடமையே கண்ணாயுள்ளோன்
மாண்புகழ் மாதவத்தின் மகிமையை உணர்ந்திணைந்தோன்
சேண்புகழ் மேவுசெம்மைச் செய்ந்நெறி சேருளத்தோன்
வான்புகழ் மலர்ந்துநாளும் மகிழ்நனை வாழ்த்துவோமே.

## குறிஞ்சி மலர்

குன்றில் ஏற்றிய
தீபம்
குறிஞ்சி மலர்
கொஞ்சுந் தமிழ்
தென்றலெனத்
தவழும்
தித்திக்கும்
மன்றமது விரும்பும்
மறை உரை

மக்கள் விரும்பும்
அன்றலர்ந்த மலர்
அடிகளார்!
இன்று போல்
அவர்
இன்னும் பல்லாண்டு
நன்று வாழ
நாம் வாழ்த்துகின்றோம்.

★ ★

(யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி உப அதிபர் வண. யேசுநேசன் அடிகளாரின் குருத்துவ வெள்ளிவிழா இன்று 21- 12- 1990)

12131

# வடக்கு கிழக்கு தமிழர்களில் 6 லட்சம் பேர் வெளிநாடுகளில்!

வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழர்களில் 3 லட்சம் பேர் மேற்கு நாடுகளுக்கு தொழில் வாய்ப்பு, பாதுகாப்பு, வசதியான வாழ்க்கை என்பவற்றைத்தேடி பறந்து விட்டதாக புள்ளி விபரம் ஒன்றின் மூலம் அறியப்படுகின்றது.

வடக்கு கிழக்கில் மொத்தம் 17 லட்சம் தமிழர்கள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் 3 லட்சம் பேர் மேற்கு நாடுகளுக்கும், இரண்டு லட்சம் பேர் தமிழகத்திற்கும் அகதிகளாகச் சென்றுவிட்டனர்.

வடக்கு கிழக்கிற்கு வெளியே உள்ள பகுதிகளுக்கு பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி சுமார் ஒரு லட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

அத்துடன் சுமார் ஒரு லட்சம் பேர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் வாய்ப்பு பெற்றுக் சென்றுள்ளனர்.

இவர்கள் தவிர வடக்கு கிழக்குப் பகுதிகளில் எஞ்சியுள்ள தமிழர்களிலும் மூன்று லட்சம் பேர் தமது வீடுகளை விட்டு வெளியேறி அயல் பகுதிகளில் அகதிகளாக உள்ளமையும் இந்த புள்ளி விபரக்கணிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (34)

## ஜே. வி. பி. புதிய தலைவர் சோமவன்சவைத் தேடி
# இந்தியாவிற்கு இலங்கைப் பொலிஸ்!

தென்னிந்தியாவுக்கு தப்பிச்சென்றுள்ள ஜே. வி. பி இயக்க முக்கிய தலைவர் சோமவன்ச அமரசிங்காவை தேடிக்கண்டுபிடிப்பதற்கு இந்திய அரசின் உதவியை இலங்கை அரசு கோரியுள்ளது.

றெஜினோல்ட் பற்றிக் என்ற பெயரில் நடமாடிவந்த இவர் சில வாரங்களுக்கு முன்னர் நீர்கொழும்பு— மாரவில கிராமத்திலிருந்து மீன்பிடிப் படகு ஒன்றில் தென் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றிருந்தார்.

இந்திய அரசு அனுமதி அளிக்கும் பட்சத்தில் இவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு இலங்கைப் பொலிஸ் கோஷ்டியொன்று தென் இந்தியாவுக்கு அனுப்பப்படும் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விரைவில் அமரசிங்கா கைது செய்யப்படுவார் எனவும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (16)

## இல்லாத முகாம்களுக்கும் ரெண்டர் கோரப்படுகிறது

வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்களுக்கும் ஏனைய இராணுவ முகாம்களுக்கும் வெட்டப்பட்ட உலர்ந்த விறகு, மரக்கறி, பழவகை, தேங்காய், பால், இறைச்சி, மீன் என்பனவற்றிற்கு இலங்கைத் தரைப் படைத் தலைமையகம் பத்திரிகை மூலம் கேள்விகள் (ரெண்டர்) கோரியுள்ளது.

இவற்றுள் வடபகுதியில் ஏற்கனவே மூடப்பட்ட வல்வெட்டித்துறை முகாமுக்கும், புலிகளின் வசம் வீழ்ந்த மாங்குளம், யாழ்-கோட்டை முகாம்களுக்கும் மேற்படி பொருள்கள் கோரிக் கேள்விகள் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

# 4 யாழ் பெண்கள் சிங்கப்பூரில் கைது

போலிதஸ்தாவேஜுகளைப் பாவித்து சிங்கப்பூரிலிருந்து கனடாவுக்குச்செல்ல முயற்சித்ததாகக் கூறப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நால்வர் அந்நாட்டு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டு இலங்கை இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு பாடசாலை ஆசிரியை உட்பட நான்கு பெண்களே கைது செய்யப்பட்டவர்கள் என அறிவிக்கப்படுகின்றது.

இவர்கள் சிங்கப்பூருக்குச் சென்று அங்கிருந்து போலி தஸ்தாவேஜுகளைப் பயன்படுத்திக் கடவுச்சீட்டு முதலானவற்றைப் பெற்றுக்கொண்டு கனடாவுக்குச் செல்ல முயன்றபோது சிங்கப்பூர் நாட்டுக் குடிவரவு குடியகல்வுப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டனர். (11)

## ஆசிரியகலாசாலை இறுதிப்பரீட்சை டிச.26 முதல் நடைபெறும்

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இறுதிப்பரீட்சைகளை டிசம்பர் 26-ம் திகதியிலிருந்து நடாத்துமாறு கல்விஅமைச்சு பணித்துள்ளது

பரீட்சை ஆவணங்கள் யாவும் முன்னதாகவே அனுப்பப்பட்டுவிட்டன.

இம் மாணவர்களில் செயல்முறைப் பரீட்சைக்கு தோற்றாதவர்களைமீள தோற்ற ஒழுங்குகளைச் செய்யுமாறும் கல்விப் பணிப்பாளர் ஆசிரிய கலாசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கோப்பாய்,பலாலி, ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மாணவர்களுக்கே இவ் இறுதிப் பரீட்சை இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (47)

## 21-ம் திகதி முதல் 23-ம் திகதிவரை ‘மாணவர் எழுச்சி நாள்’

எமது மண்ணின் மீட்புக்காகவும், மக்களின் விடிவுக்காகவும் போராடி உயிர் நீத்த மாவீரர்களினுள் மாணவர்களின் பங்கு மறக்க முடியாதது என விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மாணவர்கள் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை பல திறமைகளைக்கொண்டிருந்தும் தனியே தாம் உண்டு, தமது கல்வியுண்டு என்ற நிலையில் இருந்துவிடாது முழு மனிதர்களாக சமூக நோக்குடன் செயலாற்றினார்கள்.

இந்த வகையில் அந்நியப் படையுடனான நேரடி மோதலில் இறந்த மேஜர் முரளி, கப்டன் காந்தி,லெப். தர்சினி, வீர வேங்கைகளான சதா, நிகிந்தா, நிதி, நிர்மலா, பஞ்சன், அமுதன், நிரா ஆகியோரையும் மேலும் அவர் வழி சென்று இதுவரை வீரமரணமடைந்த மாணவர்களையும் நினைவு கூர்ந்து 21 முதல் 23 வரையும் மாணவர் எழுச்சி நாட்களாக கொண்டாடுகின்றோம் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 21-ம் திகதி அனைத்து ஆண்டு 8 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் பொது அறிவுப் போட்டி நடைபெறும் 22ம் திகதி மாணவர்களின்இரத்ததானம் நடைபெறும். 23-ம் திகதி கொக்குவில் சந்திக்கருகாமையில் ஆரம்பமாகும் எழுச்சி ஊர்வலமும் அதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டமும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (71)

## கடத்தப்பட்ட சீனி மூடைகள் அராலியில் கைப்பற்றப்பட்டது

தீவுப்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கடத்துவதற்கெனக் கொண்டுவரப்பட்ட பெருமளவு சீனிமூடைகள் அராலித்துறையில் வைத்துக் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சீனி மூடைகள் மக்களுக்கு நிவாரணமாக வழங்கவெனக் கொடுக்கப்பட்டவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 35 க்கும் அதிகமான சீனி மூடைகள் கைப்பற்றப்பட்டதாக அறியப்படுகின்றது.

## தொலைக்கல்விப் பயிற்சிநெறி தெரிவான ஆசிரியர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

கீழ்க்காணுபவர்கள் அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது

### ஆரம்பக் கற்கைநெறி

செல்வி க. கந்தையா அராலி சரஸ்வதி வித்தி, செல்வி எஸ். சண்முகம்பிள்ளை அராலி சரஸ்வதி வித்தி, செல்வி ஏ ஜி வேலும் மயிலும் வட்டுக் சார்த்திகேயு வித்தி, செல்வி கே சுப்பிரமணியம்வட்டு.சுப்பிரமணியம் வித்தி,செல்வி ஆர். நடராஜா நாரந்தனை றோ. க. த; பா. செல்வி எஸ் மகாலிங்கம் சுருவில் றோ. க த க. பா. செல்வி வ. பதிவதனி உரும்பிராய் றோ. க. த க. பா. திரு. வி இரத்தினபாலன் உரும்பிராய் றோ, க.த க பா செல்வி பி. சிற்றம்பலம் ஏழாலை மேற்கு அ மி. த க. பா. செல்வன் ஆர் கருணாகரன் புங்குடுதீவு றோ. க. த. க பா. செல்வி எஸ். துரைச்சாமி வேலணை சைவப் பிரகாசம் வித்தி, செல்வி எஸ். சோமசுந்தரம் காரம்பை அ. மெ,த. க.பா. திரு. என் புஸ்பராஜா கந்தரோடை கனிஷ்ட வித்தி, திரு எஸ் செல்வநாதன் கம்பர்மலை றோ. க த க. பா.

### விஞ்ஞான நெறி

திரு. எஸ். சண்முகதாஸ் வேலணை சரஸ்வதி வித்தி. செல்வி ஈ. பி. மதிவதனி பிராம்பத்து கலைமகள் வித்தி, திரு.கே திருச்செல்வம் வலாய அ. மெ, த. க, பா. செல்வி கே. தங்கராஜா மாதகல் விக்னேஸ்வரா வித்தி, செல்வி பி, ஸ்ரீ சந்திரராஜா இடைக்காடு ம. வி. திரு. எஸ். கோபால கிருஷ்ணன் கட்டைக்காடுறோ. க த.க பா. செல்விஎஸ் அந்தோனிப்பிள்ளை பிராம்பத்து கலைமகள் வித்தி, திரு. எஸ். கருணாகரன் புத்தூர் எம். எம். ரி எம் செல்வி எஸ். வளர்மதி மயிலிட்டி றோ. க. த. க. பா.

## வட, கிழக்கு வைத்திய நிபுணர்க்கு 10,000 ரூபா விசேட கொடுப்பனவு

வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள வைத்திய சாலைகளில் கடமைபுரியும் வைத்திய நிபுணர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது

இந்த வைத்திய நிபுணர்கள் ஒவ்வொருவருக்கும் 10,000ரூபா விசேட கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

## கச்சாய் - ஞானிமடம் படகுச் சேவை ஆரம்பம்

பூநகரி — ஞானிமடம் கிளாலி படகு சேவையைப் போன்று ஞானிமடம் துறைமுகத்தில் இருந்து கச்சாய் பகுதிக்கும் படகு சேவை ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ப-35

## மன்னாரில் மக்கள் நடமாட்டம் ‘பாஸ்’ நடைமுறை ரத்து

மன்னார் நகரத்திற்குச் செல்வதற்கு இராணுவத்தால் வழங்கப்பட்டுவந்த ‘பாஸ்’ நடைமுறை தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் மன்னார் பகுதியில் மக்கள் நடமாட்டம் இப்பொழுது ஓரளவு அதிகரித்துக் காணப்படுகின்றது. (70)

## கேரதீவு-சங்குப்பிட்டி பாதையில் அரச ஊழியருக்கு முன்னுரிமை

தற்போதுள்ள சூழ்நிலை யுள்ளதாக இவ் ஒழுங்கு

## அரச ஊழியருக்கு முன்னுரிமை

தற்போதுள்ள சூழ்நிலையில் மக்களுக்காக சேவை செய்ய செல்லும் அரச ஊழியர்களுக்கு கேரதீவு - சங்குப்பிட்டி துறையூடாக பயணம் செய்ய முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இதேவேளை பொதிகள் மூட்டைகளுடன் பயணத்தை மேற்கொள்ளும் அரச ஊழியர்கள் இனம் காண முடியாமல் வியாபார நோக்கத்திற்காகவே பயணம் செய்பவர்களாக கருதப்பட வேண்டியுள்ளதாக இவ் ஒழுங்குகளுக்குப் பொறுப்பானவர்களால் கருதப்பட வேண்டியுள்ளது.

எனவே அரச அலுவல்கள் நிமித்தம் பயணம் செல்பவர் அதற்குரிய ஒழுங்கு முறைகளுடன் இப்பாதையூடாகப் பயணம் மேற்கொண்டால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க இலகுவாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (66- ப 35,70)

நடைமுறை தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரி

இப்பொழுது ஓரளவு அதிகரித்துக் காணப்படுகின்றது. (70)

## யானையின்தொல்லை தொடர்கிறது

### வியாபாரிகள் தீப்பந்தங்களுடன் பயணம்

பூநகரி- மன்னார் காட்டுப் பாதையூடாக இரவு வேளைகளில் பிரயாணம் செய்யும் சைக்கிள் வியாபாரிகள் கையில் தீப் பந்தங்களுடன் பிரயாணம் செய்து வருகின்றனர்.

இப் பாதையில் சில காலங்களாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்ததைத் தொடர்ந்தே வியாபாரிகள் தம்மை யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்காக இவ்வாறு செல்வதாக கூறப்படுகிறது.

கடந்த வாரமும் ஒருவர் இவ் வீதியில் யானையின் தாக்குதலால் இறந்தது தெரிந்ததே. (ப-32)

## ஐயந்தி விழா

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தில் சுவாமி விவேகானந்தரின் 129ஆவது ஜயந்தி விழா ஜனவரி 7ஆம் திகதி வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது. (50)

## எம். ஜி. ஆரின் மந்திரி நடிகன் ஆகிறார்

அ. தி. மு. க. வின் முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு திடீரென சினிமா நடிகனாக மாறியுள்ளார்

எம் ஜி. ஆர். அமைச்சரவையில் அங்கம் வகித்த இவர் அடிக்கடி பல 'சாகஸங்களைக்' காட்டி தமிழக அரசியலில் ஒரு வில்லனாகக் கணிக்கப்பட்டவர்.

தற்போது பொலிஸ் இன்ஸ்பெக்டராக ஒரு படத்தில் நடிக்கும் திருநாவுக்கரசு ''நான் சினிமாவில் தொடர்ந்து நடிப்பேன். ஆனால் அரசியலில் நடிக்க மாட்டேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

## இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு இடம் ஒதுக்குவதில் நெருக்கடி

வெளி மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்திற்கு வந்திருக்கும் ஆசிரியர்களுக்கு யாழ் மாவட்டத்தில் இடமாற்றம் வழங்க முடியாத நிலை உருவாகியுள்ளதாக வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இடமாற்றுச் சபையால் அங்கீகரிக்கப்பட்டு யாழ் மாவட்டம் வந்திருக்கும் ஆசிரியர்கள், புதிய தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் பயிலுநர் ஆசிரியர்களின் தொகையை வட ஒய்வுபெறும் ஆசிரியர்களின் தொகை குறைவாக உள்ளதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வெளிமாவட்டப் பாடசாலைகள் விடுமுறைக்காக மூடியிருக்கும் இவ்வேளையில் யாழ் மாவட்டப் பாடசாலைகள் மட்டும் நடைபெறுகிறது. ஆகவே வெளிமாவட்ட ஆசிரியர்கள் யாழ் மாவட்டத்தில் இடமாற்றங் கோரத்தேவை ஏற்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

## வவுனியா நகருக்குள் பிரவேசிக்க மக்கள் தவம்! வடக்கே செல்ல உணவு லொறிகளுக்கு அனுமதி

வவுனியாவிற்கு வடக்கே பூந்தோட்டம் ஊடாக வவுனியாவிலிருந்து லொறிகள் உணவுப்பொருட்கள் ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்படுகின்றது.

ஆனால் பூந்தோட்டம் வழியாக வடக்கேயிருந்து வவுனியாவிற்கு வாகனங்கள் செல்ல இராணுவம் அனுமதிக்கவில்லை.

அத்துடன் ஆயிரக்கணக்கான மக்கள் பூந்தோட்டம் எல்லையில் வவுனியா நகருக்குள் நுழைய தவம்கிடக்கின்றனர்.

வடக்கேயிருந்து கொழும்பு செல்பவர்களை மட்டும் இராணுவம் அனுமதிக்கின்றது. அதுவும் பூந்தோட்டத்திலிருந்து வவுனியாவிற்கு இராணுவத்தினரின் பாதுகாப்புடன் வாகனத்தில் செல்லவேண்டும்.

மக்களை செல்லவிடாதது பற்றி வவுனியா பிரஜைகள் குழுவினர் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிலைமையினை விளக்கினார்கள் என பிரஜைகள் குழு வட்டாரம் தெரிவித்தது.

## களபூமியில் விநாயக சஷ்டி

காரைநகர் தன்னை களபூமி பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் 23-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை விநாயக சஷ்டி பூர்த்தியை முன்னிட்டும் பிள்ளையார் கதை நிறைவை யொட்டியும் பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன. பிள்ளையார் கதை படிப்பும் நடைபெறுமென தேவஸ்தானத்தினர் தெரிவித்துள்ளனர். (34)

## உலக அரங்கில்

### சோவியத் பிரதமர் ராஜினாமா!

சோவியத் பிரதமர் எட்வேட் ஷெவர் நாட்ஷே நேற்று ராஜினாமா செய்துள்ளார். இவர் தனது இந்த திடீர் அறிவிப்பை சோவியத் பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

சோவியத் குடியரசுகளில் நிலவும் அமைதியின்மை குறித்து ஆராயவென நேற்று சோவியத் பாராளுமன்றம் கூடியது. கூட்டத் தொடரில் கலந்து கொண்ட பிரதமர் ஷெவர்னாஷே. "நான் இன்றுடன் எனது பதவியை ராஜினாமா செய்கிறேன். இதற்குக் காரணமும் உண்டு இங்கு (ரஷ்யாவில்) படிப்படியாக சர்வாதிகாரம் தலைதூக்குகிறது ஜனாதிபதி கொர்பச்சேவ்வுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்த வேண்டு மென்றே சில 'பிற்போக்குவாதிகள் உள்ளிருந்து திட்டம் போடுகின்றனர். இது விரைவில் சர்வாதிகார ஆட்சியைக் கொண்டுவரவே வழிசெய்யப்படுகிறது."

இவ்வாறு ஓர் துரதிருஷ்டம் நாட்டிற்கு ஏற்படக் கூடாது என்பதை விரும்பியே அதை எச்சரிக்கை செய்யும் முகமாக எனது பதவியை ராஜினாமாச் செய்கிறேன் என்றார். ஷெவர்நாட்ஷே உரையாற்றும் போது உணர்ச்சி வசப்பட்டவராகக் காணப்பட்டார். தனது உரையின் இறுதியில் "சுதந்திரமும் ஜனநாயகமுமே இறுதியில் வெற்றியடையும் என நம்புகிறேன்" எனக்கூறி முடித்தார்.

ஜனாதிபதி கொர்பச்சேவ்வின் திறந்த அரசியல், பொருளாதாரக் கொள்கைகளின் தீவிர ஆதரவாளரான எட்வேட் ஷெவர்நாட்ஷே. வல்லரசுகளின் கெடுபிடியுத்தம் முடிவுக்கு வரவும், சோவியத்தின் இரும்புத்திரையை விலக்கவும், இரு ஜேர்மனியர்களும் இணையவும் கொர்பச்சேவ்வுக்கு பக்கபலமாக நின்றுஉழைத்தவர் என்பது நினைவு கூரத்தக்கது.

ஷெவர்நாட்ஷேயின் ராஜினாமா மேற்கு நாடுகளில் குறிப்பாக ஜேர்மனி, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளின் அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### போருக்கு பொதுமக்களைத் தயாராக்கும் ஈராக்

ஈராக் அரசு, போர் வெடித்தால் பொதுமக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் எனத் தற்காப்பு பயிற்சிகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது.

இதற்கென பல இடங்களில் பயிற்சி முகாம்கள் அமைக்கப்பட்டு விமானக் குண்டு வீச்சு, ஏவுகணைத் தாக்குதல் எதிரித் துருப்புகளின் நேரடித் தாக்குதல் என்பவற்றில் இருந்து எவ்வாறு தற்காப்புச் செய்துகொள்வது என பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை தலைநகர் பக்கத்தில் இருந்து பாதுகாப்பு கருதி சுமார் பத்தாயிரம் சிவிலியன்களை வாகனங்கள் மூலம் ஈராக் ராணுவம் அப்புறப்படுத்தி வருகிறது.

**க. பொ. த. உயர்தரம்**
**விஞ்ஞானப் பிரிவு**
**90, 91, 92**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**23.12.90 ஞாயிறு பிற்பகல் 2 மணி**

| | |
|---|---|
| பௌதிகவியல் : | திரு. நந்தகுமார் |
| இரசாயனவியல்: | திரு செல்வா |

★ கூட்டுறவுச்சங்கங்கள் வன்னிப்பகுதியில் கொள்வனவு

# யாழ் குடாநாட்டில் நியாயவிலையில் அரிசி

# அடுத்தவாரம் முதல் கிடைக்க நடவடிக்கை

யாழ் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பொருட்களுக்கான செயற்கைத் தட்டுப்பாட்டை நீக்க யாழ் மாவட்ட பலநோ. கூ. சங்கங்கள் புதிதாக நடவடிக்கைகள் எடுத்துள்ளன. இதன்படி கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்து பெருமளவு அரிசியும், நெல்லும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன,

முதற்கட்டமாக தெல்லிப்பழை, புலோலி, நல்லூர் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இவற்றைக் கொள்வனவு செய்து லொறிகள் மூலம் யாழ்ப்பாணப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய விவசாயப் பகுதிகளில் சிறுபோகத்தால் பெறப்பட்ட பெருமளவு நெல் தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக விவசாயிகளால் விற்க முடியாது தேங்கிக் கிடந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இங்குள்ள சில வியாபாரிகள் அரிசிக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியும், அதிக விலையில் விற்றும் வருவதையும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியதை அடுத்தே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கள் இப்பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று விவசாயிகளிடமிருந்து நியாய விலைகளில் இப் பொருட்களைப்பெற்று இங்கு கொண்டுவர ஏற்பாடாகியுள்ளது.

மேற்கூறிய மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையடுத்து ஏனைய சங்கங்களும் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இச் சங்கங்களின் இவ்வாறான நடவடிக்கைகளால் நத்தார் புதுவருட தினத்தில் மக்கள் நியாய விலையில் அரிசியைப் பெற்றுக் கொள்ளலாம் எனக் கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்தன. (66)

### 16 அகதி முகாம்களுக்கு தென்னிந்திய திருச்சபை உதவி

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு வடமராட்சி கிழக்கில் பதினாறு முகாம்களில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு தென்னிந்திய திருச்சபை உலர் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

ஒவ்வொன்றும் நானூறு ரூபா பெறுமதியுள்ள பொதிகளில் அரிசி, சீனி, மா, பருப்பு பயறு, சவர்க்காரம், தேயிலை சோயா இறைச்சி, தீப்பெட்டி மெழுகுதிரி என்பன அடங்கிருந்தன. (18)

### ஆரியகுளத்தில் இருந்து நுளம்பு ஒழிக்கப்படுகிறது

யாழ் ஆரிய குளத்தில் நீரின் மேல் படர்ந்துள்ள பச்சைப்புல் யாழ் மாநகர சபையினால் தற்பொழுது அகற்றப்பட்டு வருகின்றது.

இந்தப் பச்சைப்புல்லின் மீது பெருமளவில் நுளம்பு உற்பத்தியாகி அதன் மூலம் நெருப்புக் காய்ச்சல் நோய் பரவி வருவதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் நகரில் உள்ள வடிகால்களைச் சுத்தம் செய்யப்படாது நுளம்புகள் அங்கு பெருகுவதையும் அவதானிக்கமுடிகிறது. (ப- 11)

### கூட்டுறவுச் சபை விசேட பொதுக் கூட்டம்

இன்று காலை 10 மணியளவில் மேற்படி கூட்டம் சிறாம்பியடி லேனில் உள்ள சபை மண்டபத்தில் நடைபெறும்.

### மருத்துவ ..

இவற்றை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதற்கான அனுமதியை உரிய காலத்தில் வழங்காது கூட்டுப் படைத் தலைமையகம் காலம்

### மாங்குளம்...

கேணல் போர்க்கின் உருவப் பட இணைப்புடன் நாளை வெளிவருகிறது.

நாளைய முரசொலியில் மாங்குளம் தாக்குதலில் வீர மரணமடைந்த விடுதலைப் புலிகள், கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் என்ற விபரங்கள்

விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணி அறிக்கை

### மேஜர் ஜேம்ஸ், வாசு பாதையில் கப்டன் சுந்தரி

கட்டுவன் பகுதியில் 19-12-90 அன்று முகாமில் இருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப்புலிகள் இயக்கப் பொதுச் செயலாளர் கப்டன் சுந்தரி வீரமரணமடைந்துள்ளார்.

1984-ம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்ட இவர் தனது இராணுவப்பயிற்சியை முடித்துக் கொண்டு 1987 காலப்பகுதியில் தென்மராட்சிப் பகுதி மகளிர் அணியின் அரசியல் பொறுப்பாளராக இவர் கடமையாற்றினார்.

இந்தியப்படையின் ஆக்கிரமிப்பில் எமது மண் இருந்த போது வன்னியில் இந்திய இராணுவத்துடன் தாக்குதல்களில் பெண் போராளிகளுடன் இணைந்து போரிட்டவர்.

அதனைத் தொடர்ந்து 1989-ம் ஆண்டின் பிற்பகுதியில் மக்கள் முன்னணி கட்சி பிரகடனப்படுத்திய போது அதன் துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

மக்கள் மத்தியில் சமூக பொருளாதார ஆய்வுகளை மேற்கொண்டதுடன் மக்களை அரசியலில் தீவிரப் படுத்தினார்.

விடுதலைப் போரில் ஈடுபட்ட பல குடும்பங்களில் கப்டன் சுந்தரியின் குடும்பமும் ஒன்றாகும்.

1987 மாசி-26-ந் திகதி கைதடியில் நிகழ்ந்த வெடி விபத்தில் வீரமரணமடைந்த கப்டன்வாசுவும். 1990 ஆவணி 9-ம் திகதி அச்சுவேலியில் விமானத் தாக்குதலில் வீரமரணமடைந்த மேஜர் ஜேம்ஸ் கப்டன் சுந்தரியின் சகோதரர்களேயாகும்.

துணைப் பொதுச்செயலாளர் கப்டன் சுந்தரிக்கும் அவருடன் வீரமரணமடைந்த 7 பெண் போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (71)

### யாழ் போதனா வைத்தியசாலைக்கு இரு ஜெனறேற்றர்கள் கிடைத்தன

20 கே.வி. மின்சாரத்தினை வழங்கக் கூடிய இரண்டு ஜெனறேற்றர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளது.

இதன் மூலம் யாழ் ஆஸ் ... குமிழ்களுக்கு தினமும் மாலை 6 மணி முதல் காலை 6 மணிவரை மின் சாரத்தினை வழங்கக் கூடியதாக இருக்கும்.

இந்த ஜெனறேற்றர் நாளை முதல் சேவையிலீ ...

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

## 23.12.90 ஞாயிறு பிற்பகல் 2 மணி

| | |
|---|---|
| பௌதிகவியல் : | திரு. நந்தகுமார் |
| இரசாயனவியல்: | திரு செல்வா |
| தூய, பிரயோக கணிதம்: | திரு. சந்திரமோகன் |
| விலங்கியல்: | திரு. நாகநாதன் |
| தாவரவியல்: | திரு. ஐங்கரநேசன் |

# யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

12134

## அறிவித்தல்

''செல்வா எலெற்ரோனிக் கோப்'' NO. 11, ஸ்ரான்லி வீதியில் அமைந்திருக்கும் எமது ஸ்தாபனம் திருத்த வேலைகள் முடிவடைந்தவுடன் ஆரம்பிப்போம் என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றோம். தற்போது K. K. S. வீதி கோண்டாவிலில், (தாவடிச் சந்திக்கு அருகாமை) அமைந்துள்ளது நேரடியாகவோ—கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

உரிமையாளர்: செல்வா
மல்லாகம்

12132

இப் பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 21-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

### மருத்துவ ..

இவற்றை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதற்கான அனுமதியை உரிய காலத்தில் வழங்காது கூட்டுப்படைத் தலைமையகம் காலம் கடத்தி வருகின்றதாம். (74)

### மின் ...

சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அநேகமாக அடுத்தவருட ஆரம்பத்தில் வடபகுதிக்கு நீர் மின்சாரம் மீண்டும் கிடைப்பதற்கான சாத்தியம் உண்டெனவும் தெரிவிக்கப்படுகின்றது,

இத்திருத்த வேலை சம்பத்தமான மதிப்பீடு அடுத்த சில தினங்களுக்குள் பூர்த்தியாக்கப்படுமெனவும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ப 11)

### இலங்கைத் ...

கைத் தூதுவரே எனினும் இதில் சுவீடன் அமைச்சர்களும் கலந்துகொண்டதாகவும் அனுரா குறிப்பிட்டார்.

சுவீடனில் உள்ள தூதுவர் பிரேமதாஸவின் மைத்துனர் என்றும் இந்தத் தகவலை முன்னாள் அமைச்சர் றொனி டீ மெல் தமக்குத்தந்ததாகவும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

இந்தத் தூதுவரின் நடத்தையால் நமது நாட்டுக்கு அபகீர்த்தி எனவும் அவர் சொன்னார்.

பட இணைப்புடன் நாளை வெளிவருகிறது.

நாளைய முரசொலியில் மாங்குளம் தாக்குதலில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள், கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் என்ற விபரங்கள் வெளிவரும். (71)

### யாழ் பல்கலைக் ...

கொழும்பு போக்குவரத்து நிலைமை சீரடைந்ததும் இங்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த உபகரணங்கள் கிடைத்ததும் யாழ் பல்கலைக்கழக மருத்துவ, விஞ்ஞான பீட மாணவர்கள் ஆய்வுகூட பரிசோதனைகள் மூலம் கூடிய அறிவைப் பெறுவதுடன் இலகுவாக பரிசோதனைகளைச் செய்து கொள்ள முடியுமெனவும் யாழ் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (71)

### இடம்பெயர்ந்த ..

இப் பணிமனையின் பிரதம கல்வி அதிகாரியின் முன்னிலையிலேயே ஒப்பமிட்டு ஒப்படைக்க வேண்டுமென்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதனால் மட்டக்களப்பு திருமலை, மன்னார் பகுதிகளிலிருந்து வெளியேறி வட பகுதியில் தற்காலிகமாகக் கடமை புரிவோர் பயனடையவுள்ளனர். (32)

20 கே.வி. மின்சாரத்தினை வழங்கக் கூடிய இரண்டு ஜெனறேற்றர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளது.

இதன் மூலம் யாழ் ஆஸ்பத்திரி பாதுகாப்புப் பகுதிக்கும், ஆஸ்பத்திரி சுற்று வட்டாரத்திலுள்ள 32 மின் குமிழ்களுக்கு தினமும் மாலை 6 மணி முதல் காலை 6 மணிவரை மின்சாரத்தினை வழங்கக் கூடியதாக இருக்கும்.

இந்த ஜெனறேற்றர் நாளை முதல் சேவையிலீடுபடுத்தப்படும் என வைத்தியசாலை மின் பகுதியினர் தெரிவித்தனர். (ப 11)

## காலமானார்

## வித்துவான்
## சரவணமுத்து கந்தையா

நேற்று முன்தினம் இறைபதமடைந்த தனங்கிளப்பைச் சேர்ந்த ஒய்வு பெற்ற ஆசிரியர் வித்துவான் சரவணமுத்து கந்தையா அவர்களின் இறுதிக் கிரியை நேற்று மறவன்புலோ தனிப்பனை மயானத்தில் நடைபெற்றது.

அன்னார் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும் திருமதி செல்வராணி திருநாவுக்கரசு, திரு. பாலசுப்பிரமணியம், திருமதி டாக்டர் அமிர்தகௌரி திரு லோகமூர்த்தி (கிளிநொச்சி), திருமதி பாலசரஸ்வதி திருஞானசம்பந்தர், திருமதி சந்திரலீலா நாகரத்தினம், திருமதி சாரதாதேவி செல்லத்துரை, செல்வி சுசீலா (ஆசிரியை விசுவமடு மகாவித்தியாலயம்), திருமதி சறோஜினிதேவி பொன்னம்பலம், அமரர் சிறிஸ்கந்தவேள், திரு. சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலினி, ஜெயமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

தகவல்: மனைவி, மக்கள்,
மருமக்கள்.

தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

12140